திருப்பரங்குன்றத்தில் மலைமேல் குமரருக்கு அக்.17–இல் வேல் எடுக்கும் விழா

திருப்பரங்குன்றம், அக். 4: திருப்பரங்குன்றத்தில் மலை மேல் குமரருக்கு வேல் எடுக்கும் திருவிழா அக்.17–ஆம் தேதி நடைபெற உள்ளது.

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தெய்வப் புலவர் நக்கீரரின் சாப விமோச்சனத்தை நினைவுகூரும் வகையிலும், விவசாயம் செழிக்க வேண்டியும் மலைமேல் குமரருக்கு வேல் எடுக்கும் திருவிழா ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் கொண்டாடப்படுவது வழக்கம். நிகழாண்டுக்கான திருவிழா வரும் 17–ஆம் தேதி நடைபெறுகிறது.

அன்று காலை 9 மணிக்கு மூலஸ்தானத்தில் உள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கரத்தில் உள்ள தங்க வேல் அலங்கரிக்கப்பட்டு, பல்லக்கில் வைக்கப்பட்டு நகரின் முக்கிய சாலைகள் வழியாக சுற்றி மலைமேல் உள்ள குமரர் சந்நிதிக்கு எடுத்துச் செல்லப்படும். பின்னர், அங்குள்ள காசி தீர்த்தத்தில் பால், பன்னீர் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகம் செய்யப்பட்டு, மலை மேல் உள்ள குமரருக்கு வேல் சாத்தி சிறப்பு அபிஷேகம், ஆராதனை செய்யப்படும்.

பின்னர், மாலையில் மலைக்கு அடிவாரத்தில் உள்ள பழனியாண்டவர் சந்நிதிக்கு வேல் கொண்டுவரப்பட்டு அங்கு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெறும்.

இதையடுத்து, வேல் முக்கிய வீதிகள் வழியாகச் சுற்றி மீண்டும் கோயிலுக்கு கொண்டுவரப்பட்டு மூலவர் சுப்பிரமணியருக்கு சாத்தப்பட்டும்.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ப.சத்யபிரியா பாலாஜி, அறங்காவலர்கள் வ.சண்முகசுந்தரம், மணிச்செல்வம், பொம்மதேவன், ராமையா, கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயில் தெப்பத் திருவிழா

திரளானோர் பங்கேற்பு

மதுரை, அக். 4 : மதுரை தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலின் புரட்டாட்சிப் பெருந்திருவிழாவையொட்டி, தெப்ப உத்ஸவம் திருமுக்குளத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

மதுரையை ஆட்சி செய்த மன்னர் திருமலை நாயக்கரால் நிர்மாணிக்கப்பட்டது தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயில். இந்தக் கோயிலில் புரட்டாசிப் பெருந்திருவிழா கடந்த மாதம் 23–ஆம் தேதி திருக்கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெறுகிறது.

தினமும் காலையில் வெவ்வேறு அலங்காரங்களிலும், இரவில் வெவ்வேறு வாகனங்களிலும் பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான தெப்ப உத்ஸவம் சனிக்கிழமை நடைபெற்றது. இதையொட்டி, பிரசன்ன வெங்கடாஜலபதிக்கு காலையில் சிறப்பு திருமஞ்சனம் நடைபெற்றது.

இதையடுத்து, சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் (உத்ஸவர்) தல்லாகுளம் திருமுக்குளத்தில் எழுந்தருளினார்.

அங்கு, ஐதீக முறைப்படியான பூஜைகளுக்கு பிறகு பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் தெப்பத்துக்கு எழுந்தருளினார்.

இதையடுத்து, சிறப்பு, தீப, தூப ஆராதனைகளுக்குப் பிறகு, வேத மந்திர முழக்கங்களுடன் தெப்ப உத்ஸவம் நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை தல்லாகுளம் திருமுக்குளத்தில் சனிக்கிழமை வலம் வந்த பிரசன்ன வெங்கடாஜலபதி கோயில் தெப்பம். (உள்படம்) தெப்பத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய பிரசன்ன வெங்கடாஜலபதி (உத்ஸவர்).

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இணைய வழியில் போட்டிகள்

மதுரை, அக். 4: மதுரை மாவட்ட வனத் துறை சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இணைய வழியில் பேச்சு, ஓவியப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதுகுறித்து மதுரை மாவட்ட வனத் துறை அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வன உயிரின வார விழாவை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி இணைய வழியில் நடத்தப்படுகிறது. எனவே, பள்ளி நிர்வாகம் மாணவ, மாணவிகளின் படைப்பாற்றலை mduwildlife@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் பதிவேற்றம் செய்து சமர்ப்பிக்கலாம். வருகிற திங்கள்கிழமை (அக்.6) இரவு 11 மணி வரை பதிவேற்றம் செய்யலாம்.

வெற்றி பெறுவோருக்கு மதுரை மாவட்ட வன அலுவலர் தலைமையில் நடைபெறும் விழாவில் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டது.

விவசாயி தற்கொலை

திருப்பரங்குன்றம், அக். 4: திருப்பரங்குன்றம் அருகே மது அருந்த மனைவி பணம் தராததால், விவசாயி தற்கொலை செய்து கொண்டார்.

திருப்பரங்குன்றம் அருகேயுள்ள சம்மக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் முனியாண்டி (42). விவசாயி. இவரது மனைவி பஞ்சு (41). முனியாண்டிக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாம்.

இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை முனியாண்டி தனது மனைவியிடம் மது அருந்த பணம் கேட்டு தகராறு செய்தார். பஞ்சு தர மறுத்தால் கோபமடைந்த முனியாண்டி விஷம் குடித்தார். உடனடியாக குடும்பத்தினர் அவரை மீட்டு, மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு முனியாண்டி வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். இதுகுறித்து ஆஸ்டின்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

கரோனா கால அகவிலைப்படி உயர்வை விரைந்து வழங்க வலியுறுத்தல்

மதுரை, அக். 4 : கரோனா காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட 18 மாத காலத்துக்கான அகவிலைப் படி உயர்வை விரைந்து வழங்க வேண்டும் என தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி வலியுறுத்தியது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் மதுரை மாவட்டச் செயலர் பெ. சீனிவாசன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மத்திய அரசுப் பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 3 சதவீதம் அகவிலைப் படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. அக விலைப்படி என்பது தீபாவளி பரிசல்ல. அது தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமை. நிகழாண்டில் உள்ள விலைவாசி உயர்வை ஈடுகட்டும் வகையில் அளிக்கப்படும் ஓரளவு நிவாரணம். இதை மத்திய உள்துறை அமைச்சர் தீபாவளி பரிசு எனக் கூறுகிறார்.

தற்போதைய நிலையில், தொழிலாளர் வர்க்கம் ஏற்கெனவே பல உரிமைகளை இழந்து, அரசின் கொள்கைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக அகில இந்திய அளவில் பல கட்டப் போராட்டங்களை நடத்தி வருகிறது. கரோனா காலத்தில் 18 மாத அகவிலைப் படி உயர்வு இன்னும் வழங்கப்படவில்லை. இதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

பொது அறிவிப்பு

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI வங்கி லிமிட்டெட், 4/10, வைத்தீ டவர், பொம்மனஹள்ளி ஒகுர் பிரதான சாலை, பெங்களூரு-560068

பின்வரும் கடன்தாரர்/கள் ICICI வங்கியிடம் இருந்து பெற்ற கடன் வசதியின் அசல் மற்றும் வட்டியை திரும்ப செலுத்த தவறி விட்டபடியால், அந்தக்கடன்கள் செயல்படாத சொத்துகள் (NPA) என பகுக்கப்பட்டுள்ளன. கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002-இன் பிரிவு 13(2)-இன் கீழ் அவர்களுக்கு கடைசியாக அறிவிப்பட்ட அவர்களது முகவரிகளுக்கு ஓர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் அது பட்டுவாடா ஆகவில்லை மேலும் எனவே, இந்த பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்கு இங்கே அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர்/கட்டு-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்/(கடன் கணக்கு எண்) & முகவரி	நடவடிக்கை எடுக்கப்பட கடனீட்டு வேண்டிய சொத்து முகவரி	அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்/ அறிவிப்பு நாளன்றுள்ளபடி நிலுவைத்தொகை	NPA நாள்
1.	வாசர் R எண். 240, நல்லூர், இளையாங்குடி கட்டனூர், சாமநாதபுரம், தமிழ்நாடு-630710 / 300751000037, 300705003171	அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட வீட்டுமனைதி கட்டப்பட்ட பழைய கதவு எண்.10ய (மதிப்பீடு எண். 11731) பரப்பளவு 4272 சதுர அடி அளவைப்பெற்ற சர்வே எண். 47/2, தேவகோட்டை நகராட்சி நகரம், வார்டு எண். 18 தற்போது 21வது வார்டு, நில்லை நகர் இடுகாடுக்கு பதிவு மாவட்டம், தேவகோட்டை சார் பதிவு மாவட்டத்தின் அதிகார வரம்புக்குள், சிறுமருதூர் குழுமத்தில் அமைந்துள்ளது மற்றும் நகர சர்வே எண். A, பிளாக் எண். 1 1.5.எண். 47/2 இல் உள்ளது. எல்லைகள்: வடக்கு: MPTC மற்றுகவர் கிழக்கு: மனோகரன் ராஜேஸ்வரிக்கு சொந்தமான மனை தெற்கு: குணசேகரனுக்குச் சொந்தமான மனை மற்றும் 30 அடி அகல சாலை மேற்கு: உமையாளுக்குச் சொந்தமான மனை அளவீடுகள்: கிழமேல் வடபறம் மற்றும் தென்புறம் நூல 44 1/2 அடி மற்றும் தென்வடல் கிழபறம் மற்றும் மேல்புறம் 96 அடி மொத்த பரப்பளவு 4272 சதுர அடி. மற்றும் வீட்டு வசதிக் கட்டடத்தில் உள்ள அனைத்து மாமூல் வசதிகளுடன். இதனுடன் அதில் உள்ள அனைத்து கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள், உரிமைகள், சாதனங்கள், பொருத்துதல்கள் மற்றும் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகிய இரண்டிலும் பூமியுடன் இணைக்கப்பட்ட அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட எதன்மீதும் நிரந்தரமாக இணைக்கப்பட்ட அனைத்து தாவரங்கள் மற்றும் இயந்திரங்கள்.	மே 31,2025/ ரூ. 5,08,394.05 / ரூ17,11,273.79	23/02/2025

அறிவிப்புக்கான மாற்று சேவைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட கடன்தாரர்(கள்) மற்றும்/ அல்லது அவர்களது ஜாமீன்தாரர்கள் (பொருந்ும் எனில்) இந்த அறிவிப்பு நாளில் இருந்து 60 நாள்களுக்குள் நிலுவைக்கான தொகையை செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில், கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002-இன் விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்

நாள்: 04.10.2025
இடம்: மதுரை

உண்மையுள்ள, அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI வங்கி லிட்-க்காக

CHANGE OF NAME

I, M.S. Ramanujan, Son of Thiru. M.Senthil Kumar, born on 25th July 2003, (District of Birth - Dindigul), residing at No. 610, Sirumani Nagar, Balakrishnapuram, Dindigul - 624 005, Shall henceforth be known as **M.S. ADHITHYA.**

M.S. RAMANUJAN
Dindigul,
16th November 2021.

உடனடிச் செய்திகள் குடாக சுருக்கமாக... www.dinamani.com

equitas எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

(முன்னர் எக்விடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002
போன்: 044 - 4299 5000, 044 - 4299 5050

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்கானது விதி 8 (1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அகற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்தமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி சட்டம் 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு கீழே குறிக்கப்பட்டவாறு தொகைகளுடன் அதற்குண்டான வட்டி மற்றும் பிற செலவுகள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் (அசையா சொத்து / கள்)	
கிளை : காரைக்குடி LAN No: SEKKUDI0365367 112007363209 கடன்தாரர்கள் : 1. திருமதி. தனவள்ளி 2. திரு. ஆறுமுகம்	சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை தாலுக்கா, தேவக்கோட்டை முனிசிபெல் டவுன், வார்டு - 23 (உடையாட்சி குழுமம்), டவுன் வார்டு - K, பிளாக் எண்.2, டவுன் சர்வே எண்.2/1என்படி மனை எண்.3ல் உள்ள **2627 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : ஏகனை பெரியசாமி சேர்வை அவர்களின் சொத்து, தெற்கில் : 20 அடி அகல நடைபாதை, கிழக்கில் : மனை எண்.4, மேற்கில் : திருமதி. கற்பகவள்ளி அவர்களின் மனை எண்.2.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 22.07.2024 & ரூ.2,40,555.70	சுவாதீன தேதி 30.09.2025
கிளை : காரைக்குடி LAN No: 200002158556, SEKKUDI0415876 கடன்தாரர்கள் : 1. திரு. ஜெயகுமார் 2. திருமதி. அமுதா	சொத்து 1 : சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, புதுவயல் பஞ்சாயத்துக்குட்பட்ட சாக்கோட்டை குழுமம், வார்டு எண். 8, புதுவயல் கிராமம், பழைய சர்வே எண். 101/14, புதிய சர்வே எண். 101/47-ன் படி தெற்குப்பகுதியில் உள்ள **1820 சதுர அடி, 169.08 சதுர மீட்டர்,** பட்டா எண். 937 (மொத்தப்பரப்பளவு 10 சென்ட்) நிலம் மற்றும் அங்குள்ளகட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : திரு.ராஜ்குமார் அவர்களுக்கு விற்கப்பட்ட மனை, தெற்கில்: திருராமன் செட்டியார் அவர்களுக்கு சொந்தமான மனை, கிழக்கில் : திரு.சோமசுந்தரம் அவர்களுக்கு சொந்தமான மனை, மேற்கில் : திரு.செந்தில்குமார் அவர்களுக்கு விற்கப்பட்ட மனை.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 21.05.2025 & ரூ.17,52,617/-	சுவாதீன தேதி 30.09.2025
கிளை : காரைக்குடி LAN No: 200002417570, SEKKUDI0409531, 1119267923014 கடன்தாரர்கள் : 1. திருமதி. ஜோதி 2. திரு. முருகானந்தம்	சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, செங்காத்தான்குடி குழுமம், பரவயல் கிராமம், சர்வே எண். 292/12A-ன்படி வடக்குப்பகுதியில் உள்ள **2180 சதுர அடி,** 5 சென்ட், 0.02.00 ஏர்ஸ், பட்டா எண். 4084 (மொத்தபரப்பளவு 0.06.00 ஏர்ஸ், 14.82 சென்ட்) நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : கிழக்கு மேற்கான நடைபாதை, தெற்கில்: திரு.ஆனந்தன் அவர்களின் பஞ்சை நிலம், கிழக்கில் : திரு.சிங்காரம் அவர்களின் சர்வே எண்.292/14, 15, மேற்கில் : சர்வே எண். 292/11, சாலை.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 21.05.2025 & ரூ.5,54,259/-	சுவாதீன தேதி 30.09.2025
கிளை : பழனி LAN No: 200001805311 & SEPLANI0453464 கடன்தாரர்கள் : 1. மகுடேஸ்வரன்.D 2. தேன்மொழி.M	பழனி பதிவு மாவட்டம், சக்கரப்பட்டி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுக்கா, கணக்கன்பட்டி கிராமம், பழைய சர்வே எண்.31/1, புதிய சர்வே எண்.730/15, நத்தம் நிலவரித்திட்டத்தின்படி சிட்டா எண்.691ன்படி **3466 சதுர அடி அதற்கு சமமாக 322 சதுர மீட்டர்** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். இதன் கதவு எண்.5/101 & மின்வாரிய இணைப்பு எண்.052870062825. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : திரு. பழனிசாமி அவர்களுக்கு சொந்தமான வீடு, தெற்கில் : தெரு மற்றும் திருமதி. பாப்பாத்தி அவர்களுக்கு சொந்தமான வீடு, கிழக்கில் : திரு. முருகேசன் அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில் : திரு. முருகேஷ் மற்றும் திரு. வீரப்பன் ஆகியோர்களுக்கு சொந்தமான வீடு.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 14.06.2025 & ரூ.20,80,098/-	சுவாதீன தேதி 04.10.2025
கிளை : திண்டுக்கல்-2 LAN No: 200001834457 & SEDNDII0344397 & 7051004706372 கடன்தாரர்கள் : 1. மல்லிகா.V 2. வேல்மணி.K	பழனி பதிவு மாவட்டம், வடமதுரை துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் தாலுக்கா, வெள்வார்கோட்டை கிராமம், சர்வே எண்.467ன்படி **9147 சதுர அடி** நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : சாலை மற்றும் திரு. செங்கராஜ் அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில் : திருமதி. மல்லிகா அவர்களுக்கு சொந்தமான நிலம், கிழக்கில் : திரு. ஜெயவேல் அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில் : திரு. வேல்மணி அவர்களுக்கு சொந்தமான நிலம்.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 14.06.2025 & ரூ. 14,13,447/-	சுவாதீன தேதி 03.10.2025
கிளை : காரைக்குடி LAN No: 600000125903, SEKKUDI0420551 கடன்தாரர்கள் : 1. திரு. ராமன்.U 2. திருமதி. பாப்பா.R	ராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தாலுக்கா, கோவிந்தமங்கலம் கிராமம், பழைய நத்தம் சர்வே எண்.154/1குதி, புதிய நத்தம் சர்வே எண்.154/18ன்படி **2423.07 சதுர அடி** நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : சர்வே எண்.160/2, திரு. பாண்டி, தெற்கில் : சர்வே எண்.154/17, திருமதி. பகேஸ்வரி, கிழக்கில் : சர்வே எண்.154/19 & 16, திரு. அழகர், மேற்கில் : வழி, வாய்க்கால். (நீர்க்கால்வாய்).	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 10.07.2025 & ரூ.5,96,995/-	சுவாதீன தேதி 30.09.2025
கிளை : காரைக்குடி LAN No: SEKKUDI0291843, 600000047235, 7051004278282 கடன்தாரர்கள் : 1. திரு. சேதுராமன்.S 2. திருமதி. இந்திரா 3. திரு. சொன்னமுத்து	காரைக்குடி பதிவு மாவட்டம், தேவக்கோட்டை துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை தாலுக்கா, கப்பலூர், குரவக்கோட்டை கிராமம், நத்தம் பழைய சர்வே எண்.297/1பகுதி, புதிய சர்வே எண்.297/5ன்படி **1076.92 சதுர அடி (அதற்கு சமமாக 100.04 சதுர மீட்டர்)** நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : சர்வே எண்.297/5, திருமதி. முத்தம்மாள், தெற்கில் : சர்வே எண்.297/7, திருமதி. கருப்பாயி, கிழக்கில் : சர்வே எண்.297/15, வழி, மேற்கில் : சர்வே எண்.297/1, நத்தம்.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 14.06.2025 & ரூ. 4,96,371/-	சுவாதீன தேதி 30.09.2025
கிளை : நத்தம் LAN No: SENATAM0431667 கடன்தாரர்கள் : 1. திரு. சந்திரசேகர் 2. திருமதி. சங்கரி	காரைக்குடி பதிவு மாவட்டம், சிங்கம்புணரி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காரைக்குடி மாவட்டம், சிறுமருதூர் குழுமம், கதவு எண்.523, 20, பழைய சர்வே எண்.124/2, புதிய சர்வே எண்.124/8ன்படி **0057.5 சதுர மீட்டர்** குடியிருப்பு இடம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : கிருஷ்ணன் அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில் : முத்துசாமி அவர்களுக்கு சொந்தமான வீடு, கிழக்கில் : அழகு அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில் : சாலை. இந்த சொத்து காரைக்குடி பதிவு மாவட்டம், சிங்கம்புணரி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 08.04.2025 & ரூ.4,63,130//-	சுவாதீன தேதி 30.09.2025
கிளை : நத்தம் LAN No: 700008775142 கடன்தாரர்கள் : 1. திருமதி. லஷ்மி 2. திரு. அழகு	காரைக்குடி பதிவு மாவட்டம், சிங்கம்புணரி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட சிவகங்கை மாவட்டம், S.வையாபுரிபட்டி பஞ்சாயத்து, சிறுமருதூர் கிராமம், பழைய பட்டா எண்.189, பழைய சர்வே எண்.102/9C, தற்போதை பட்டா எண்.1959, புதிய சர்வே எண்.102/9C2ன்படி **8712 சதுர அடி அதற்கு சமமாக 20 சென்ட்** சாலை உட்பட உள்ள குடியிருப்பு இடம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : பொட்டம்மாள் அவர்களின் சொத்து, தெற்கில் : சின்னமுத்து அவர்களின் சொத்து, கிழக்கில் : புதுக்கோட்டை - சிவகங்கை சாலை, மேற்கில் : பொட்டம்மாள் அவர்களின் சொத்தின் பகுதி. அளவு: மொத்த பரப்பளவு - 8712 சதுர அடி.	
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 08-03-2025 & ரூ. 4,96,228/-	சுவாதீன தேதி 30.09.2025

தேதி : 05.10.2025
இடம் : மதுரை

அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ujjivan SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவனிதி தொகை (EMD)
கிளை அலுவலகம்: D,15-1-24/8, முதல் தளம், அருண் ஆசாரி காம்ப்ளக்ஸ், தேவாரம் ரோடு, ஸ்மார்ட் பாயிண்ட் அருகில், போடிநாயக்கனூர், தேனி - 625513					
1.	1195210170000002 / 1. Mr.ஜெயபிரபு V, 2. Mrs.தோந்தியம்மாள்	(i) 13.07.2021 & 12.07.2021 அன்றுள்ளபடி ₹ 7,79,441/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து நானூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.03.2022 & நேரடி சுவாதீனம் - 15.07.2025	12.09.2025 அன்றுள்ளபடி ₹18,05,700.96 (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஐந்தாயிரத்து எழுநூறு மற்றும் பைசா தொன்னூற்று ஆறு மட்டும்)	₹ 15,84,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்)	₹ 1,58,400/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து நானூறு மட்டும்)
கிளை அலுவலகம்: எண்.1/1/1/109, கம்பம் மெயின் ரோடு, கைலாசப்பட்டி.T, கள்ளிப்பட்டி, பெரியகுளம், தேனி, தமிழ்நாடு-625601					
2.	1602210170000134 / 1. Mr.பாண்யடிராஜன் 2. Mr.S.கோவிந்தன், 3. Mrs.தமிழ்செல்வி கோவிந்தன்	(i) 12.02.2025 & 29.01.2025 அன்றுள்ளபடி ₹ 8,20,774/- (ரூபாய் எட்டு லட்சத்து இருபதாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 13.05.2025 & நேரடி சுவாதீனம் - 15.07.2025	02.09.2025 அன்றுள்ளபடி ₹ 10,05,894.71 (ரூபாய் பத்து லட்சத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று நான்கு மற்றும் பைசா எழுபத்து ஒன்று மட்டும்)	₹ 3,33,300/- (ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து முன்னூறு மட்டும்)	₹ 33,330/- (ரூபாய் முப்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று முப்பது மட்டும்)

சொத்து விவரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார்-பதிவு